முலாயம் சிங் உடலுக்கு

டி.ஆர்.பாலு, உதயநிதி ஸ்டாலின் நேரில் சென்று இறுதி மரியாதை

திமுக தலைமை அறிவிப்பு

சென்னை, அக். 11: முலாயம் சிங் உடலுக்கு திமுக பொருளாளரும், நாடாளுமன்றக் குழுத் தலைவருமான டி.ஆர். பாலு, இளைஞரணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் இன்று நேரில் சென்று இறுதி மரியாதை செலுத்துகின்றனர்.

இது குறித்து திமுக தலைமை வெளியிட்ட அறிக்கை: உத்தரபிரதேச மாநில முன்னாள் முதலமைச்சரும், சமாஜ்வாதி கட்சி நிறுவனருமான தலைவர் முலாயம் சிங் மறைவையடுத்து, திமுக தலைவரும், தமிழக முதல்வருமான மு.க. ஸ்டாலின் அவரது மகனும் சமாஜ்வாதி கட்சியின் தலைவருமான அகிலேஷிடம் தொலைபேசியில் தொடர்புகொண்டு தனது இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்தார். முலாயம் சிங் உடலுக்குக் திமுக பொருளாளரும், நாடாளுமன்றக் குழுத் தலைவருமான டி.ஆர். பாலு, இளைஞரணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் இன்று நேரில் சென்று இறுதி மரியாதை செலுத்த உள்ளனர்.

இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

சோழர் பாசன திட்டத்தை வலியுறுத்தி

அரியலூரில் 2 நாள் நடைபயணம்

அன்புமணி அறிவிப்பு

சென்னை, அக். 11: பாமக தலைவர் அன்புமணி நேற்று வெளியிட்டுள்ள அறிக்கை:

தமிழ்நாட்டின் சராசரி மழை அளவான 937 மி.மீட்டரை விட அதிகமாக 954 மி.மீட்டர் மழை அரியலூர் மாவட்டத்தில் பெய்கிறது. ஆனாலும், அரியலூர் மாவட்டம் வறண்ட மாவட்டமாக நீடிப்பதற்கு காரணம் அம்மாவட்டத்திலுள்ள நீர்நிலைகள் பயனற்றுப் போய் விட்டது தான். சோழ மன்னர்கள் ஏற்படுத்திய நீர்ப்பாதைகள் காலப்போக்கில் அவை முறையாக பராமரிக்கப்படாததால் சோழகங்கம் ஏரி அதன் பரப்பளவில் பெரும்பகுதியை ஆக்கிரமிப்பாளர்களிடம் இழந்து விட்டது.

அரியலூர் சோழர் பாசனத் திட்டத்தை செயல்படுத்த வலியுறுத்தி வரும் 29ம் தேதி (சனிக்கிழமை), 30ம் தேதி (ஞாயிற்றுக்கிழமை) ஆகிய இரு நாட்களும் அரியலூர் மாவட்டத்தில் எழுச்சி நடைபயணம் மேற்கொள்ள தீர்மானித்திருக்கிறேன். அரியலூர் மாவட்டத்தின் கீழப்பழூரில் தொடங்கும் எழுச்சி நடைபயணம் காட்டுமன்னார்கோவில் என்ற இடத்தில் நிறைவடையும்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

மு.க.ஸ்டாலினுக்கு திருமாவளவன் வாழ்த்து

▶ திமுக தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டதையொட்டி, முதல்வர் மு.க.ஸ்டாலினை நேற்று முகாம் அலுவலகத்தில் விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் திருமாவளவன் சந்தித்து வாழ்த்து தெரிவித்தார். அருகில், அமைச்சர் மகேஷ் பொய்யாமொழி, எம்எல்ஏக்கள் உதயநிதி ஸ்டாலின், எஸ்.எஸ்.பாலாஜி, விடுதலை சிறுத்தைகள் கட்சி நிர்வாகிகள்.

அங்கீகரிக்கப்படாத 30,000 மனைகள் பதிவு

பதிவுத்துறை அலுவலர்கள் பலர் சஸ்பெண்ட்

ஐகோர்ட் கிளையில் தமிழக அரசு தகவல்

மதுரை, அக். 11: அங்கீகரிக்கப்படாத 30 ஆயிரம் மனைப்பிரிவுகளை பதிவு செய்த விவகாரத்தில், பதிவுத்துறை அலுவலர்கள் பலர் சஸ்பெண்ட் செய்யப்பட்டுள்ளதாக ஐகோர்ட் கிளையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேனி மாவட்டம், வீரபாண்டி அருகே பழனி செட்டிபட்டியைச் சேர்ந்த சரவணன், ஐகோர்ட் மதுரை கிளையில் தாக்கல் செய்த மனு: வீரபாண்டி பேரூராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் அரசின் முறையான அங்கீகாரம் பெறாத வீட்டடி மனைகளை மோசடியாக விற்பனை செய்வதுடன், சட்டவிரோதமாக பத்திரப்பதிவு செய்கின்றனர். உள்ளாட்சி பகுதிகளில் அங்கீகரிக்கப்படாத நிலம், மனைகளை பத்திரப் பதிவு செய்யக்கூடாது என சட்டம் உள்ளது. ஆனால், சட்ட விதிகளை முறையாக பின்பற்றாமல் தேனி சார்பதிவாளர் அலுவலகத்தில், சார்பதிவாளர் உஷாராணி முறைகேடாக பத்திரப்பதிவு செய்து கொடுக்கிறார். அந்த பத்திரங்களை ரத்து செய்யவும், முறைகேட்டில் ஈடுபட்டோர் மீது நடவடிக்கை எடுக்குமாறும் உத்தரவிட வேண்டும். இவ்வாறு கூறியிருந்தார்.

இந்த மனு நீதிபதிகள் ஆர்.மகாதேவன், ஜெ.சத்ய நாராயண பிரசாத் ஆகியோர் முன் நேற்று மீண்டும் விசாரணைக்கு வந்தது. கூடுதல் அட்வகேட் ஜெனரல் வீராகதிரவன், அரசு கூடுதல் பிளீடர் ராமச்சந்திரன் ஆகியோர் ஆஜராகி, "இந்த விவகாரத்தில் தேனி சார்பதிவாளர் உஷாராணி ஏற்கனவே சஸ்பெண்ட் செய்யப்பட்டுள்ளார். பத்திரப்பதிவு சட்டம் 22 ஏ அமலான பிறகு கடந்த 2017 முதல் சுமார் 30 ஆயிரம் அங்கீகரிக்கப்படாத வீட்டு மனைப்பிரிவுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இது தொடர்பாக பதிவுத் துறை அலுவலர்கள் பலர் சஸ்பெண்ட் செய்யப்பட்டுள்ளனர். பலர் மீது மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது" என்றனர்.

இதையடுத்து அரசுத் தரப்பில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை தொடர்பான விபரத்தை தாக்கல் செய்ய உத்தரவிட்டு விசாரணையை அக்.17க்கு நீதிபதிகள் தள்ளி வைத்தனர்.

ராணிப்பேட்டை மாந்தாங்கல் கிராமத்தில்

திரவ நிலை அழுத்தப்பட்ட இயற்கை எரிவாயு நிலையம்

முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்

சென்னை, அக். 11: ராணிப்பேட்டை மாந்தாங்கல் கிராமத்தில் முதலாவது திரவ நிலை அழுத்தப்பட்ட இயற்கை எரிவாயு நிலையத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்.

ஒன்றிய அரசு, தமிழ்நாட்டில் நகர இயற்கை எரிவாயு விநியோகத்தினை, குழாய்கள் மூலம் வழங்குவதற்காக, அனைத்து மாவட்டங்களிலும் உட்கட்டமைப்பை உருவாக்குவதற்கான அங்கீகாரத்தை, 7 நிறுவனங்களுக்கு வழங்கியுள்ளது. தமிழ்நாட்டில் காஞ்சிபுரம், செங்கல்பட்டு, வேலூர், ராணிப்பேட்டை, திருப்பத்தூர் மற்றும் ராமநாதபுரம் ஆகிய 6 மாவட்டங்களுக்கு, மேற்படி உட்கட்டமைப்பை உருவாக்குவதற்கான அங்கீகாரம் ஏஜி&பி பிரதம் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

அதன்படி, தமிழகத்தில் 222 பகிர்மான நிலையங்கள் மற்றும் 7 லட்சம் வீடுகளுக்கும் குழாய்கள் மூலம் இயற்கை எரிவாயு வழங்கும் பணியினை 8 வருடங்களில் இந்த நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட உள்ளது.

தற்போது, ஏஜி&பி பிரதம் நிறுவனம் ராணிப்பேட்டை மாவட்டத்தில் உள்ள மாந்தாங்கல் கிராமத்தில், தமிழகத்தின் முதலாவது திரவ நிலை அழுத்தப்பட்ட இயற்கை எரிவாயு நிலையத்தை அமைத்துள்ளது. இந்த எரிவாயு நிலையம் 30 கோடி ரூபாய் செலவில் 1.2 ஏக்கர் நிலப்பரப்பில் அமைக்கப்பட்டுள்ளது. இந்த நிலையத்தில் இரண்டு 56,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட திரவ நிலை அழுத்தப்பட்ட இயற்கை எரிவாயு கிடங்கு, ஆவியாக்கி இயந்திரம் மற்றும் உயர் அழுத்த பம்ப் அமைத்துள்ளது.

இதன்மூலம், ராணிப்பேட்டை மாவட்டத்தில் சுமார் 70 பகிர்மான நிலையங்களுக்கும் மற்றும் 30,000 வீடுகளுக்கும் குழாய்கள் மூலம் இயற்கை எரிவாயு இணைப்பு ஏஜி&பி நிறுவனத்தினால் வழங்கப்பட உள்ளது.

இந்நிலையில், "ஏஜி&பி பிரதம்" நிறுவனம் ராணிப்பேட்டை மாவட்டம், மாந்தாங்கல் கிராமத்தில் அமைத்துள்ள முதலாவது திரவ நிலை அழுத்தப்பட்ட இயற்கை எரிவாயு (சிஎன்ஜி) நிலையத்தை சென்னை தலைமைச்செயலகத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று, காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார்.

நிகழ்ச்சியில், அமைச்சர் தங்கம் தென்னரசு, தலைமைச் செயலாளர் வெ.இறையன்பு, தொழில், ஏஜி&பி பிரதம் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குனர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் தலைவர் அபிலேஷ் குப்தா, முதன்மை செயல்பாட்டு அலுவலர் சிரதீப் தத்தா மற்றும் நிறுவனத்தின் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

GOVERNMENT OF TAMIL NADU
MEDICAL SERVICES RECRUITMENT BOARD (MRB)
7th Floor, DMS Building, 359, Anna Salai, Teynampet, Chennai - 600 006.
Phone No : 044-24355757. Fax No : 044-24359393
Website: www.mrb.tn.gov.in E.mail: mrb.tn.nic@gmail.com Twitter: twitter.com/mrb_tn

NOTIFICATION NO. : 11/MRB/2022 **DATE : 11.10.2022**

Medical Services Recruitment Board (MRB) invites on-line application for direct recruitment for the below mentioned post in Tamil Nadu Medical Service carrying the scale of pay noted against on temporary basis.

Note :
I. **The Notification issued vide Notification No. 02/MRB/2020, Dated: 22.05.2020 for the post of Assistant Surgeon (General) stands withdrawn. Candidates who have already applied as per Notification No. 02/MRB/2020, Dated: 22.05.2020 have to apply once again as per this fresh Notification.**
II. **Candidates who have paid the examination fee need not pay the examination fee once again and requested to furnish the already payment paid details in the Fee details column besides furnishing the earlier application number.**

Sl.No.	Name of the post	No. of Vacancies	Backlog @ Vacancies	Total Vacancies	Scale of pay (Rs.)
1.	Assistant Surgeon (General)	946	75	1021	Level 22 Rs.56100 - 177500

(@ Backlog vacancies: i) Differently Abled persons for all categories -71, ii) Scheduled Tribe-4)

IMPORTANT DATE:

Date of Notification in Website	11.10.2022
Commencement of submission of application through Online mode	11.10.2022
Last date for submission of Application (Online Registration & Online payment)	25.10.2022
Date of Written / Computer Based Examination	Tentatively in the Month of November 2022

FEE :	SC / SCA / ST / DAP(PH)	Rs.500/-	Others	Rs. 1000/-

Candidates can apply only through online. Any other mode / form of applications will be summarily rejected. For details regarding **Age, Educational qualification, General Information, Eligibility conditions, other important instructions etc.,** candidates must refer to the detailed notification of the Medical Services Recruitment Board's website **www.mrb.tn.gov.in.** The detailed notification forms part of this notification.

DIPR/ 1036 /DISPLAY/2022 "சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம், சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்" **MEMBER SECRETARY**

நந்திவரம்–கூடுவாஞ்சேரி நகராட்சி
செங்கல்பட்டு மாவட்டம்
ந.க.எண். 1022/2022/அ1 **நாள் : 06.10.2022**

நகராட்சி ஆணையாளர், நந்திவரம்–கூடுவாஞ்சேரி நகராட்சி அவர்களால் **Atal Mission for Rejuvenation and Urban Transformation 2.0 (Amrut 2.0) 2022-23**ன் கீழ் கீழ்கண்ட பணிக்கு மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

1	பணியின் விவரம்	வார்டு எண்–17, புல எண்–227 பெரிய குளம் பணி.
2	மதிப்பீடு தொகை	ரூ.62.25 இலட்சம்
3	முன்வைப்புத் தொகை 1%	ரூ.62,250/–
4	பணி எண்ணிக்கை	1
5	பணி முடிக்க வேண்டிய காலம்	180 நாட்கள்
6	ஒப்பந்தப்புள்ளி தேதி மற்றும் நேரம்	**27.10.2022** வியாழக்கிழமை மாலை **3.00** மணி வரை
7	ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும் நாள், நேரம் மற்றும் இடம்	**27.10.2022** வியாழக்கிழமை மாலை **3.30** மணிக்கு
8	ஒப்பந்தப்புள்ளி நகலை பெறுதல் மற்றும் இதர விவரங்கள் தெரிந்து கொள்ளுதல்.	இதர விவரங்கள் **http://tntenders.tn.gov.in** என்ற வலையதளத்தில் வெளியிடப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பில் பார்த்து தெரிந்து கொள்ளலாம்.

செ.ம.தொ.இ./ 4478 /ஒப்பந்தப்புள்ளி/2022
ஆணையாளர்
நந்திவரம்–கூடுவாஞ்சேரி நகராட்சி
செங்கல்பட்டு மாவட்டம்
"சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம், சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்"

சுவாதீன அறிவிப்பு

இவ்வறிருக்க, **ஜனா சிறு நிதி வங்கி லிமிடெடின்** (முன்னதாக ஜனலட்சுமி நிதி சேவைகள் லிமிடெட் ஆக அறியப்பட்டது) அதிகாரப்பூர்வ அதிகாரி, பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 கீழ் மேலும் கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள் 2002 இன் விதி 3 உடன் பிரிவு 13(12) கீழ் தமக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி கடன்தாரர்(கள்)/ உப–கடன்தாரர்(கள்) அவர்களுக்கு **கோரிக்கை அறிவிப்புகள்** வழங்கி கடன்தாரர்கள் மேற்கூறிய அறிவிப்புகள் கிடைக்கப்பெற்ற தேதியிலிருந்து **60 நாட்களுக்குள்** மேற்கூறிய அறிவிப்புகளில் குறிப்பிட்டவாறு சம்பந்தப்பட்ட பெயர்களுக்கு எதிரே குறிப்பிட்டத் தொகையைப் பொருந்தும் விகிதத்திலான அதற்குரிய வட்டியுடன், பொருந்துமாறான எதிர்கால வட்டி, சாதாரண செலவினங்கள், செலவுகள், கட்டணங்கள் ஏனையவை பணப்பட்டுவாடா மற்றும்/அல்லது பணமாக மீட்கும் நாளது தேதி வரை ஏற்பட்டவையோடு சேர்த்து திருப்பிச் செலுத்துமாறுக் கோரியிருந்தார்.

வ. எண்	கடன் எண்	கடன்தாரர்/ உப–கடன்தாரர்/ ஜாமீன்தாரர்/ அடமானதாரர்	13(2) அறிவிப்பு நாள்/ தேதிய நிலுவைத் தவணை (₹ இல்)	சுவாதீனம் நாள் / நேரம் & வகை
1	47809430000259	1) திருமதி லதா & 2) திரு. குணசேகரன்	15/07/2022, 07.07.2022 தேதியன்று ₹35,84,313.95	07–10–2022 மாலை 5.20 மணி அடையாளப் பூர்வ சுவாதீனம்
	சொத்து அட்டவணை: பழைய ச. எண் 218/1B, சார் பிரிவு ச. எண் 218/1B9M, பட்டா எண் 12564 பட்டாப்படி ச. எண் 218/49 இல் அடங்கிய, ரூபாப்பட்டு கிராமத்தில அமைந்துள்ள மனை எண் 22 சார்பிரிக்கப்பட்டது கிழக்குப் பக்கம் மனை எண் 22A, விஜயா அவென்யூ முருகம்பேடு ரூபாப்பட்டு சென்னை–600066 என்ற சொத்து, விஸ்தீரணம் 1972 சதுரடியினுள் கிழக்குப் பக்கம் விஸ்தீரணம் 1218 சதுடி, அதிலான கட்டிடத்துடன் வசதிகளுடன் அம்பத்தூர் சார் பதிவு மாவட்டம் மற்றும் அம்பத்தூர் பதிவு மாவட்டம் மற்றும் சென்னை வடக்கு பதிவு மாவட்டத்திற்குள். **எல்லைகள்: வடக்கில்:** மனை எண் 6, **தெற்கில்:** மனை எண் 4, **கிழக்கில்:** 20 அடி சாலை, சந்து மற்றும் வீடு, **மேற்கில்:** மனை எண் 22 மேற்குப் பக்கம் மீதிப் பகுதி (மனை எண் 22B). **விஸ்தீரணம்:** வடக்குப் பக்கம்: 29 அடி, தெற்குப் பக்கம்: 29 அடி, கிழக்குப் பக்கம்: 45 அடி, மேற்குப் பக்கம்: 39 அடி. சொத்துப் பரப்பளவு: விஸ்தீரணம் 1972 சதுரடியினுள் விஸ்தீரணம் 1218 சதுரடி, அதிலான கட்டிடத்துடன் வசதிகளுடன். சொத்தின் தன்மை மற்றும் அனுமதிக்கப்பட்ட பயன்பாடு: குடியிருப்பு.			
2	45979630000098	1) திரு. நந்தகுமார் M & 2) திரு. செல்வி M, 3) M/s. வில்சன் பவர் டெக்	09/07/2022, 07.07.2022 தேதியன்று ₹2,43,729.30	07–10–2022 மாலை 05.43 மணி அடையாளப்பூர்வ சுவாதீனம்
	சொத்து அட்டவணை: "லட்சுமி அம்மன் நகர்", காரனோடை கிராமம், பொன்னேரி வட்டம், திருவள்ளூர் மாவட்டத்தில் அமைந்துள்ள 748 சதுடி பரப்பளவு விஸ்தீரணம், ச. எண் 17/1B பட்டாப்படி புதிய ச. எண் 17/32 இல் அடங்கிய, மனை எண் 52 என்ற, நிலம் மற்றும் கட்டிடத்தின் அனைத்து துண்டு மற்றும் பகுதி மேலும் **எல்லைகள் வடக்கில்:** 20 அடி அகலம் சாலை, **தெற்கில்:** காலி நிலம், **கிழக்கில்:** 20 அடி அகலம் சாலை, **மேற்கில்:** மனை எண் 51. **விஸ்தீரணம்:** கிழக்கிலிருந்து மேற்காக வடக்குப் பக்கம்: 22 அடி 0 அங்குலம், கிழக்கிலிருந்து மேற்காக தெற்குப் பக்கம்: 22 அடி 0 அங்குலம், வடக்கிலிருந்து தெற்காக கிழக்குப் பக்கம்: 33 அடி 6 அங்குலம், வடக்கிலிருந்து தெற்காக மேற்குப் பக்கம்: 34 அடி 6 அங்குலம். செங்குன்றம் சார்–பதிவு மாவட்டம் மற்றும் வடக்கு சென்னை பதிவு மாவட்டத்திற்குள் அமைந்துள்ளது.			
3	34229440000137	1) M/s. வெண்ணிலா உரிமையாளர் மனோ பியூட்டி பார்லர் அன் என் & 2) திருமதி வெண்ணிலா மதன்குமார் & 3) திரு. மதன்குமார்	03–08–2022, 05.07.2022 தேதியன்று ₹10,23,184.15	08–10–2022 காலை 10.00 மணி அடையாளப்பூர்வ சுவாதீனம்
	சொத்து அட்டவணை: பூங்கா தெரு, நேரு நகர், கத்திவாக்கம், சென்னை–600057 இடத்தில் அமைந்துள்ள, கத்திவாக்கம் கிராமம், திருவொற்றியூர் வட்டம், சென்னை மாவட்டத்தின், ச. எண் 46/1, (மனைவாரி தோராய பட்டா எண் 1249 இன்படி, டி.எஸ். எண் 24, பிளாக் எண் 19, வார்டு–D) இல் அடங்கிய, 389 சதுரடி விஸ்தீரணம் நிலத்தின் அனைத்து துண்டு மற்றும் பகுதி, நிலம் & கட்டிடம் **எல்லைகளாக வடக்கில்:** திரு. முருகன் மற்றும் திரு. செந்தில் ஆகியோருக்கு சொந்தமான சொத்து, **தெற்கில்:** பூங்கா தெருவிலிருந்து 5'அடி அகலம் பாதை, **கிழக்கில்:** திரு. R. அருண்குமார் அவர்களால் கொள்முதல் செய்யப்பட்ட மனை, **மேற்கில்:** திரு. J. வேலு அவர்களுக்கு சொந்தமான மனை, விஸ்தீரணம் வடக்குப் பக்கம்: 11.75 அடி, தெற்குப் பக்கம்: 11.5 அடி, கிழக்குப் பக்கம்: 33.3 அடி, மேற்குப் பக்கம்: 33.7 அடி, சென்னை வடக்கு பதிவு மாவட்டம் மற்றும் திருவொற்றியூர் சார் பதிவு மாவட்டத்திற்குள் அமைந்துள்ளது.			
4	3423440000317	1) திரு. விநாயகமூர்த்தி & 2) திருமதி சுகந்தி	03/08/2022, 05.10.2022 தேதியன்று ₹2,52,421.8	07–10–2022 மாலை 05.33 மணி அடையாளப்பூர்வ சுவாதீனம்
	சொத்து அட்டவணை: ச. எண் 45 பகுதியில் அடங்கிய, மனை எண் 1, சென்னை பெருநகர் வளர்ச்சி ஆணையம் மறைமலை நகர் திட்டம் என்எச்–1 என்ற, விஸ்தீரணம் பரப்பளவு 199 சதுடி அல்லது 18.5 ச.மீ., கதவு எண் C, பிளாக் எண் 31, "வள்ளல் சீதக்காதி தெரு" பேரமனூர் கிராமம், செங்கல்பட்டு வட்டம் மற்றும் மாவட்டத்தில் அமைந்துள்ள, குடியிருப்பு ஃபிளாட்டின் அனைத்து துண்டு மற்றும் பகுதி மேலும் **எல்லைகள்: வடக்கில்:** பிளாக் எண் 31 மனை எண்கள் S19, 520 & 521, **தெற்கில்:** பிளாக் எண் 31 ஃபிளாட் எண் 1/D, **கிழக்கில்:** பிளாக் எண் 31 ஃபிளாட் எண் 2, **மேற்கில்:** பிளாக் எண் 31 ஃபிளாட் எண் 1/B. செங்கல்பட்டு இணை II சார்–பதிவு மாவட்டம் செங்கல்பட்டு பதிவு மாவட்டத்திற்குள் அமைந்துள்ளது.			

இவ்வாறிருக்க, இங்கே மேலே குறிப்பிட்ட கடன்தாரர்/ உப–கடன்தாரர்/ ஜாமீன்தாரர்/ அடமானதாரர்கள் நிலுவைத் தொகைகளைத் திருப்பிச் செலுத்தத் தவறியுள்ளனர், இதன்மூலம் இங்கே மேற்குறிப்பிட்ட கடன்தாரருக்கு குறிப்பிட்டு மேலும் பொதுமக்களுக்கு பொதுவாக வழங்கப்படும் அறிவிப்பாவது **ஜனா சிறு நிதி வங்கி லிமிடெடின்** அதிகாரப்பூர்வ அதிகாரி மேற்கூறிய விதிகளின் விதி 8 உடன் மேற்கூறிய சட்டத்தின் பிரிவு 13(4) கீழ் அவருக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி இங்கே மேலே விவரிக்கப்பட்ட சொத்துகளை/ கடனீட்டுச் சொத்துகளை மேற்குறிப்பிட்ட தேதிகளில் **சுவாதீனம் செய்துள்ளார்.** இங்கே மேற்குறிப்பிட்ட கடன்தாரர்/ உப–கடன்தாரர்/ ஜாமீன்தாரர்/ அடமானதாரர்களுக்கு குறிப்பிட்டு மேலும் பொதுமக்களுக்கு பொதுவாக இதன்மூலம் எச்சரிக்கப்படுவதாவது மேற்கூறிய சொத்துகள்/ கடனீட்டுச் சொத்துகளுடன் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டாம் மேலும் மேற்கூறிய சொத்துகள்/ கடனீட்டுச் சொத்துகளுடனான அனைத்து நடவடிக்கைகளும் **ஜனா சிறு நிதி வங்கி லிமிடெடின்** வசூலுக்கு உட்படும்.

இடம்: சென்னை
நாள்: 10.10.2022
ஒம்/– அதிகாரப்பூர்வ அதிகாரி,
ஜனா சிறு நிதி வங்கி லிமிடெட்

ஜனா சிறு நிதி வங்கி
(ஒரு பட்டியலிடப்பட்ட வணிக வங்கி)
பதிவு அலுவலகம்: தி ஃபேர்வே, தரை & முதல் தளம், சர்வே எண் 10/1, 11/2 & 12/2B, டோம்லூர் தொலைவு, கோரமங்களா உள்வட்ட சாலை, இஜிஎல் வர்த்தகப் பூங்கா அடுத்து, சல்லகட்டா, பெங்களூர்–560071. **கிளை அலுவலகம்:** எண் 28/36, முதல் தளம், தென்மேற்கு போக் சாலை, தி. நகர், சென்னை–600017.

தீபாவளியன்று பட்டாசு வெடிக்கும் நேரம்... முதல் பக்க தொடர்ச்சி

ஒத்துழைப்போடு அனைத்து மாவட்டங்களிலும் விழிப்புணர்வு ஏற்படுத்த தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் மூலம் தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மாவட்ட அளவில் உச்ச நீதிமன்ற ஆணையின்படி நடவடிக்கை எடுக்க அனைத்து மாவட்ட ஆட்சியர்களும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம் மூலம் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். எனவே, பொதுமக்கள் சுற்றுச்சூழலுக்கு அதிக மாசு ஏற்படுத்தாத பட்டாசுகளை அரசு அனுமதித்துள்ள நேரத்தில் உரிய இடங்களில் கூட்டாக வெடித்து மாசற்ற தீபாவளியை கொண்டாடுமாறு தமிழக அரசு மற்றும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியத்தால் வலியுறுத்தப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மாசுகட்டுப்பாட்டு வாரியம் பொதுமக்கள் கடைபிடிக்க வேண்டிய விதிமுறைகள் குறித்த விவரம் வருமாறு: பொதுமக்கள் குறைந்த ஒலியுடனும், குறைந்த அளவில் காற்று மாசுபடுத்தும் தன்மையும் கொண்ட பசுமை பட்டாசுகளை மட்டுமே வெடிக்க வேண்டும். மாவட்ட நிர்வாகம், உள்ளாட்சி அமைப்புகளின் முன் அனுமதியுடன், பொதுமக்கள் திறந்தவெளியில் ஒன்று கூடி கூட்டாக பட்டாசுகளை வெடிப்பதற்கு அந்தந்த பகுதிகளில் உள்ள நலச்சங்கங்கள் மூலம் முயற்சிக்க வேண்டும்.

தவிர்க்க வேண்டியவை: அதிக ஒலி எழுப்பும் மற்றும் தொடர்ச்சியாக வெடிக்க கூடிய சரவெடிகளை தவிர்க்க வேண்டும். மருத்துவமனைகள், வழிபாட்டுத் தலங்கள் மற்றும் அமைதி காக்கப்படும் இடங்களில் பட்டாசுகள் வெடிப்பதை தவிர்க்க வேண்டும். குடிசை பகுதிகள் மற்றும் எளிதில் தீப்பற்றக் கூடிய இடங்களுக்கு அருகில் பட்டாசு வெடிப்பதை தவிர்க்க வேண்டும்.

16,888 சிறப்பு பஸ்கள் இயக்கம்... முதல் பக்க தொடர்ச்சி

▶ சென்னை தலைமை செயலகத்தில், தீபாவளி பண்டிகையை முன்னிட்டு சிறப்பு பேருந்துகள் இயக்குவது குறித்து காவல்துறை, போக்குவரத்துக் கழக மேலாண்மை இயக்குனர்கள், அரசு அதிகாரிகளுடன் அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் நேற்று ஆலோசனை நடத்தினார். அருகில், போக்குவரத்து துறை செயலாளர் கே.கோபால், சிறப்பு செயலாளர் வெங்கடேஷ் உள்ளிட்ட அதிகாரிகள்.

இயக்கப்படும் பேருந்துகள் மற்றும் சிறப்பு பேருந்துகள் என ஒட்டுமொத்தமாக 10,518 சிறப்பு பேருந்துகள் இயக்கப்படுகிறது.

மேலும், தமிழகத்தின் பிற பகுதிகளில் இயக்கப்படுகிற சிறப்பு பேருந்துகளின் எண்ணிக்கை 6,370 ஆகும். எனவே, ஒட்டுமொத்தமாக 16,888 பேருந்துகள் தீபாவளியை முன்னிட்டு இயக்கப்படுகிறது. இந்த சிறப்பு பேருந்துகள் இயக்கப்படும்போது ஒவ்வொரு பகுதிகளில் இருந்தும் எந்த வித தொந்தரவு இல்லாமல் பேருந்துகளை இயக்குவதற்காக ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. சிறப்பு பேருந்துகள் இயக்கப்படுவதால் போக்குவரத்துக்கு இடையூறு இல்லாமல் இருக்க காவல்துறையின ருக்கு போக்குவரத்தை சரிசெய்ய அறிவுறுத்தியுள்ளோம்.

புதிய தற்காலி பேருந்து நிலையங்கள் மற்றும் ஏற்கனவே செயல்பட்டு கொண்டிருக்கிற பேருந்து நிலையங்களில் இந்த பேருந்துகளை நிறுத்தி எடுக்கவும், அங்கே வருகின்ற பயணிகளுக்கான வசதிகளை செய்து தரவும் சென்னை மாநகராட்சி அலுவலர்களிடத்தில் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. ஆம்னி கூடுதல் கட்டணம் புகார் அளிக்கும் எண்கள்:

ஆம்னி பேருந்துகள் கூடுதல் கட்டணத்தை வசூலித்தால் அதை பொதுமக்கள் புகார் செய்ய சில எண்கள் வழங்கப்பட்டுள்ளது. அதாவது, 18004256151, 044-24749002, 044-26280445 ஆகிய எண்களில் தங்கள் புகார்களை தெரிவிக்கலாம். அதேபோன்று அரசு பேருந்து இயக்கம் மற்றும் புகார்களை 94450-14450, 9445014436 ஆகிய எண்களில் புகார் தெரிவிக்கலாம்.

இவ்வாறு அமைச்சர் சிவசங்கர் தெரிவித்தார்.

38,000 பேர் முன்பதிவு

அரசு விரைவு போக்குவரத்து கழகத்தில் இதுவரை சென்னையில் இருந்து செல்வதற்கு 38ஆயிரம் பேர் முன்பதிவு செய்துள்ளனர். மற்ற இடங்களில் 1,800 பேர் முன்பதிவு செய்துள்ளனர். இந்த முன்பதிவு அடிப்படையில் ஏற்கனவே கடந்த ஆண்டுகளில் இயக்கிய பேருந்துகளின் எண்ணிக்கை அடிப்படையில் இந்த ஆண்டு இந்த பேருந்துகளை இயக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மீண்டும் சென்னை வர 13,512 பஸ்கள் இயக்கம்

தீபாவளி பண்டிகையை முடித்து பிற மாவட்டங்களில் இருந்து சென்னைக்கு மீண்டும் திரும்பி வருவதற்கும் தேவையான பேருந்து வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. சென்னைக்கு திரும்பி வர வழக்கமாக இயங்குகின்ற 6300 பேருந்துகளுடன், சிறப்பு பேருந்துகள் 6852 என மொத்தம் 13,152 பேருந்துகள் இயக்கப்படுகிறது. பயணிகள் 24ம் தேதி முதல் 26ம் தேதி வரை சிறப்பு பேருந்துகளில் பயணிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கிறிஸ்தவ வன்னியர்களை எம்பிசி பிரிவில் சேர்க்க கோரி வழக்கு

சென்னை, அக். 11: கிறிஸ்தவ வன்னியர்களை மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பில் சேர்க்க கோரிய மனுவுக்கு பதிலளிக்கும்படி தமிழக அரசுக்கு சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கிறிஸ்தவ வன்னியர்களை மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பில் சேர்க்கக் கோரி பொள்ளாச்சியைச் சேர்ந்த கால்நடை மருத்துவர் விஜயன், சென்னை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த பொதுநல மனு தாக்கல் செய்திருந்தார். 10 ஆண்டுகளுக்கு மேலாகியும் மிகவும் பிற்படுத்தப்பட்ட பிரிவில் கிறிஸ்தவ வன்னியர்கள் சேர்க்கப்படவில்லை. மேலும் அவர்களை மிகவும் பி